அ.சா .1.ஜுல்பிகர்அலி, த/பெ.அபுபக்கர்.

எதிரி ஆஜர்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.</u>

அஜுல் கிளாத்திங் கம்பெனியை எத்தனை வருடங்களாக நடத்தி வருகிறேன் என்றால் 2015 முதல் 2020 வரை நடத்தி வந்தேன். மேற்படி நிறுவனத்தை தவிர வேறு நிறுவனம் நடத்தி வந்தேனா என்றால் **K.Z** எக்ஸ்போர்ட் நிறுவனத்தில் பங்குதாரராக இருந்து வந்தேன். அஜுல் கிளாத்திங் நிறுவனத்தை சிறுகுறு தொழில் நிறுவனத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பதிவு சான்றிதழை வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் உள்ளது நான் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். அவ்வாறு நான் என்வசம் உள்ளது என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அஜுல் கிளாத்திங் கம்பெனியும், **K.Z** எக்ஸ்போர்ட்டும் ஒரே முகவரியில் இருக்கிறதா என்றால் இல்லை. **K.Z** எக்ஸ்போர்ட் என்ற நிறுவனத்தை 24 வருடங்களாக நான் நடத்தி வருகிறேன்.

2. **K.Z**. எக்ஸ்போர்ட்டில் நானும் கனகராஜ் என்பவரும் பங்குதாரராக இருந்து வந்தோம் என்றால் சரிதான். மேற்படி கனகராஜ் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதன்பின்னிட்டு மேற்படி **K.Z** எக்ஸ்போர்ட் நிறுவனம் இயங்கி வருகிறதா என்றால் இல்லை. அஜுல் கிளாத்திங் கம்பெனிக்கு **order** எடுப்பதற்கு **Byeing Agent** மூலமாகத்தான் எடுப்பேனா என்றால் நானே நேரடியாக பேசி **Order** ஐ எடுப்பேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் வெளிநாட்டு தொழில்முகவர்களிடம் பேசும்போது அனமாரியா என்பவர் என்னிடம் எப்போது அறிமுகமானார் என்றால் 2019 வருடம் தேதி குறிப்பாக ஞாபகமில்லை. என்னிடம் அதற்கான ஆவணம் உள்ளது. அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு எந்தவொறு ஆவணமும் இல்லாத காரணத்தால் தான் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. **Order** பிடிக்கும் கம்பெனியின் தொழில் பின்னனி குறித்தும் அவர்களுடைய வர்த்தகங்களை குறித்தும் பொதுவாக விசாரிப்போம் என்றால்

சரிதான். அனமாரியா என்னிடம் **U.S**. $ 542,115.60 மதிப்புக்கான கைத்தறி துணி மற்றும் மதிப்பு கூட்டப்பட்டதற்கான கொள்முதல் ஆணையின் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு அனமாரியா என்பவர் என்னிடம் எந்தவிதமான கொள்முதல் ஆர்டரும் போடவில்லை என்பதால் தான் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணம் என் வசம் உள்ளது. **U.S**. $ 542,115.60 மதிப்புக்கான இந்திய மதிப்பு எவ்வளவு என்றால் ஒரு **U.S** $ தோராயமாக ரூ.75/- இருந்தது.

எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/.எம்.சார்லஸ் ஆல்பர்ட்,
நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.